**பட்டியல் வகுப்பினர் பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)**

**சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை: திரு. M. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

அமர்வு நீதிபதி பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான(வன்கொடுமை தடுப்பு)

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 82/2025**

**[CNR.NO.TNTV16-000082-2025]**

(தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

சிறப்பு அமர்வு வழக்கு எண். 143/2024

[CNR.NO.TNTJ09001594-2024] )

| | |
|---|---|
| புகார்தாரரின் பெயர் | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>மன்னார்குடி உட்கோட்டம்,<br>தலையாமங்கலம் காவல் நிலைய குற்ற எண். 01/2017. |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | விக்னேஷ் - 6 ம் எதிரி (வயது 31/2026)<br>த/பெ. அய்யப்பன்,<br>மேலக்குடியிருக்கு, ஏத்தக்குடி,<br>மன்னார்குடி தாலுக்கா.<br>திருவாரூர் மாவட்டம். |
| எதிரி மீதான குற்றச்சாட்டுகள் விபரம் | **இந்த 6 வது எதிரி மீதான குற்றச்சாட்டு**<br>இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 326, இ.தச. பிரிவு 149 உ/இ |

| | | |
|---|---|---|
| | ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 323, இ.த.ச பிரிவு 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va). | |
| எதிரி காவலில் அடைக்கப்பட்ட நாள் | 02.01.2017 ம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். | |
| புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட நாள் | 01.01.2017 | |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 27.06.2017 | |
| பா.நா.சு.ச பிரிவு 251- ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்டகப்பட்ட நாள் | 29.01.2026 | |
| பா.நா.சு.ச பிரிவு 348-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பலவகை மனுக்கள் மற்றும் அதன் மீதான உத்தரவுகள். | -- | |
| **சாட்சிகள்** | **மு.வி.நாள்** | **கு.வி.நாள்** |
| அ.சா.1 பார்த்திபன் | 06.02.2026 | இல்லை |
| அ.சா.2 சுந்தர் | 04.03.2026 | இல்லை |
| அ.சா.3 கவிதா | 04.03.2026 | இல்லை |

| | | |
|---|---|---|
| அ.சா.4 ராஜராஜன் | 09.03.2026 | இல்லை |
| அ.சா.5 பாலாஜி | 23.03.2026 | இல்லை |
| அ.சா.6 குணசேகரன் - குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் | 23.03.2026 | 23.03.2026 |
| பா.நா.சு.ச பிரிவு 351(1)(b)-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 25.03.2026 | |
| எதிரியிடம் தலைமறைவான நாள் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | இந்த வழக்கில் எதிரி தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்துள்ளார். பின்னர் கடந்த 11.12.2025 அன்று காவல்துறையினர் இவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளனர். | |
| குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்று | குற்றவாளி இல்லை | |
| நீதிபதியின் தீர்மானம் | எதிரி குற்றவாளி இல்லை. | |
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக**, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 326, 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 323, 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவுகள் 336, 506(2) உ/இ, | |

| | |
|---|---|
| | ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 235-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 25.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுக்காக சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S. மகாதேவன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.டில்லிபாபு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலித்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

### 1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:

காவல் துறையினர் முன்னதாக இவ்வழக்கில் மேலே சொல்லியுள்ள 6 ம் எதிரி மீது மட்டும் அல்லாமல், 1 எதிரி குமரவேல், 2 ம் எதிரி வெங்டேசன், 3 ம் எதிரி செந்தில், 4 ம் எதிரி ராஜ், 5 எதிரி தமிழரசன் 6-ம் எதிரி விக்னேஷ் 7 ம் எதிரி துரையரசன் என 7 எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளனர். அந்த இறுதி அறிக்கையின்படி,

இவ்வழக்கின் சாட்சி 1 மற்றும் அவரை சார்ந்தவர்கள் அனைவரும் இந்து ஆதிதிராவிடர் பறையர் வகுப்பை சார்ந்தவர்கள். எதிரிகள் அனைவரும் இந்து கள்ளர் வகுப்பை சார்ந்தவர்கள். கடந்த 01.01.2017 ஆம் தேதி 00.45 மணிக்கு சாட்சி-1, அவரை சார்ந்தவர்களும் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு அவங்க தெரு முகப்புல சாட்சி-1 சார்ந்த பசங்களும், கேக் வெட்டி இனிப்பு கொடுத்து ஆரவாரம் செய்து கொண்டாடி, வாளியில் சுண்ணாம்பு கரைசலுடன் எழுத சென்றதும் எதிரிகள் அனைவரும் இங்கு எழுதக்கூடாது என்று வாதி தரப்பிற்கும், எதிரிகளுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டு சத்தம் பேட்டு அ.சா-1 மற்றும் அவரை சார்ந்தவர்கள் கேட்டபோது எதிரிகள் அனைவரும் கற்களை வீசி தாக்கி 1ம் எதிரி அ.சா-1 யை கம்பியால் இடது கை மணிக்கட்டில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், 2 ம் எதிரி கையால் கண்ணத்தில், முக்கில் தாக்கியும், 3ம் எதிரி கம்பால் தாக்கியும், மற்ற எதிரிகளான 4, 5, 6 மற்றும் 7 வது எதிரிகள் இவங்க புண்டை மகன்களை விடாதீங்கடா இந்த பற நாய்களுக்கு அவ்வளவு திமிரா, அடித்து கொல்லுங்கடா என சத்தம் போட்டு கல்லால் சாட்சி -1யும் அவர்கள் சார்ந்தவர்களையும் தாக்கி சொறப காயத்தை ஏற்படுத்தியதாக 1 முதல் 7 எதிரிகளின் செய்கையானது இ.த.ச சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 352, 323, 324, 506(ii) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s), 3(2)(va) -ன் கீழ்

தண்டிக்கப்பட வேண்டுமென மன்னார்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மன்னார்குடி குற்றவில் நீதித்துறை நடுவர் எண்.2 ல் இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி இறுதி அறிக்கையானது மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 ல் மொத்தம் 7 எதிரிகள் மீது PRC.No.24/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் எதிரிகள் ஆஜரானவுடன் கு.வி.மு.ச பிரிவு 209 ன் கீழ் மேற்படி மன்னார்குடி நீதிமன்றம் தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பியுள்ளது. மேற்படி தஞ்சை நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண் 137/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 7 எதிரிகள் ஆஜராகியுள்ளனர். இந்நிலையில் 6ம் எதிரி வழக்கு விசாரணைக்கு ஆஜராகதாததால் அவருக்கு எதிராக பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்து பின்னர் இந்த 6ம் எதிரியின் பிணையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பிணைய பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேற்படி வழக்கில் இந்த வழக்கிலிருந்து இந்த 6ம் எதிரி மீதான வழக்கை மட்டும் பிரித்து எடுத்து தஞ்சை நீதிமன்றத்தில் SSC.No.143/2024 என் கொடுக்கப்பட்டு வழக்கு

நிலுவையில் இருந்து வந்துள்ளது. ஏனைய எதிரிகள் மீது SSC.No.137/2017 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் திருவாரூரில் புதிதாக பட்டியல் சமூகத்தினர்கள் மற்றும் பட்டியல் பழங்குடியினர்கள் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரணை செய்வதற்கான இந்த நீதிமன்றம் கடந்த 19.07.2025 ம் தேதி ஏற்படுத்தப்பட்டதன் அடிப்படையிலும் இவ்வழக்கின் குற்ற சம்பவம் இந்நீதிமன்றத்தின் ஆள்வரைக்குள் ஏற்பட்டுள்ளது என்பதால் மேற்படி S.S.C.No. 137/2017 மற்றும் SSC.No.143/2017 ஆகிய இரண்டு வழக்குகளும், இந்த நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு மேற்படி வழக்கு கோப்புகள் இந்த நீதிமன்றத்திற்கு வந்துள்ளது. இந்த நீதிமன்றத்திற்கு SSC.No.143/2024 வழக்கு வந்தவுடன் இந்த வழக்கிற்கு புதிய வழக்கு எண் SSC.No.82/2025 என கொடுக்கப்பட்டுள்ளது. இது பிரித்து எடுக்கப்பட்ட வழக்கு என்பதால் தாய்வழக்கில் உள்ள ஆவணங்களில் இருந்து அனைத்து ஆவணங்களும் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு அதில் நீதிபதியால் சான்றிடப்பட்ட ஆவணங்கள் கோப்பில் பராமரிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் குறிப்பிடப்படும் ஆவணங்கள் அனைத்தும் சான்றிட்ட நகல்கழ் என்பது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

**3.** இந்த நீதிமன்றத்தில் 6 ம் எதிரி ஆஜரானவுன் அரசு தரப்பு மற்றும் 6 ம் எதிரி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் இவ்வழக்கின் இந்த எதிரி மீது. (i) ச/பி. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 326, 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 323, 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவுகள் 336, 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரவு 3(2)(va) -ன் -ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது 6 ம் எதிரி குற்றசாட்டுகளை மறுத்துள்ளார். இதனால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் மொத்தம் அரசு தரப்பில் அ.சா-1 முதல் அ.சா-6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-25 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** இவ்வழக்கில் மொத்தம் அரசு தரப்பில் அ.சா-1 முதல் அ.சா-6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ-1 முதல்

அ.சா.ஆ-25 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாராம்சம்**:

(i). **அ.சா.1 பார்த்திபன்**, **அ.சா.2 சுந்தர்**, **அ.சா.3 கவிதா**, **அ.சா.4 ராஜராஜன்**, **அ.சா.5 பாலாஜி** இவர்கள் அனைவரும் ஏத்தக்குடி கிராமத்தில் வசித்து வருகிறார்கள். இவர்களின் சாட்சியங்களின்படி அ.சா-1 க்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. அ.சா-2 கடந்த 01.01.2017 ஆம் தேதி அதிகாலை புத்தாண்டை கொண்டாடும் வகையில் புத்தாண்டு வாழ்த்துக்களை சாலையில் எழுதுவதற்காக சாலையில் நின்றுகொண்டிருந்தபோது கூட்டமாக இருந்த நபர்களில் ஒருவர் இவரை அடித்துவிட்டார். சம்பவ இடத்திலிருந்த சத்தம் கேட்டு அந்த இடத்திற்கு இந்த அ.சா-3 ம் இவரது கணவரான மேகன் என்பவரும் சென்றபோது யாரோ ஒருவர் இவரது கணவரை அடித்துள்ளார். காயம்பட்டதால் மோகன் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போது அங்கு விசாரணை செய்ய வந்திருந்த போலீசார் அ.சா.3 ன் கணவரிடம் ஒரு கையொப்பம் கேட்டதால் ஒரு கையொப்பம் மட்டும் செய்து கொடுத்துள்ளார். பின்னால் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3 ன்

கணவரான மோகன் என்பவரின் கையொப்பம் மட்டும், இந்த அ.சா.3 ன் மூலம் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) அ.சா-6 குணசேகரன் இவர் மன்னார்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியிலிருந்தபோது கடந்த 01.01.2017 ஆம் தேதி உதவி ஆய்வாளர் ரஜேந்திரன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலினை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மோகன் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.2 ஆன புகார் வாக்குமூலம் பெற்று பின்னர், நிலையம் வந்து நிலைய குற்ற எண்.01/2017, ச/பி. 147, 148, 294(பி), 352, 323, 324, 506(2) இதச உ/இ 3 (1) (r) , 3(1) (s), 3(2)(va) SC & ST (PoA) Act ன் கீழ் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள வழக்கை திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அப்பொழுது மன்னார்குடி துணை காவல் கண்காணிப்பாளராக இருந்த திரு. ரவிச்சந்திரன் என்பவரை புலன் விசாரணை செய்ய வேண்டுமென அ.சா.ஆ-4 ஆன செயல்முறை ஆணையான C.No.01/SJ&HR/TVR/2017 Dated 01.01.2017 ம் தேதி மூலம் உத்தரவிட்டுள்ளார் என்றும், அதனை தொடர்ந்து காவல் துணை கண்காணிப்பாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவர் சாட்சிகள் மோகன், அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 பாலாஜி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். மேலும், 01.01.2017-ம் தேதியன்று தென்பாதி

பேருந்து நிலையத்தில் வெளியூர் செல்ல தயாராக இருந்த எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் எனவும், அ.சா-1 மோகன் என்பவரை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி ஆஜர்செய்து சாட்சிய வாக்குமூலம் பெற்றுள்ளார் என்றும், பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகளான ரவி மற்றும் பாஸ்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னர் மேற்படி காவல்துணை கண்காணிப்பாளர் உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் இந்த வழக்கினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 07.02.2017 செயல்முறை ஆணையான C.No.01A/SJ&HR/TVR/2017 Dated 07.02.2017 மூலம் இவ்வழக்கினை தன்னை விசாரணை செய்ய வேண்டுமென அ.சா.ஆ.7 செயல்முறை ஆணை உத்தரவிட்டுள்ளார். அதன் பின்னர்இந்த அ.சா-6 இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இச்சம்பவத்தில் காயம்பட்ட நபரான அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 பாலாஜி ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் கீர்த்திவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.8 முதல் அ.சா.ஆ.12 ஆன விபத்து பதிவேடுகளை பெற்றுள்ளார். பின்னர், இந்த வழக்கில் சாட்சி மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் வழங்க வேண்டி மன்னார்குடி வட்டாட்சியர் மலர்கொடி என்பவருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி

முருகானந்தம் மகன் மோகன் (இறப்பு), அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 பாலாஜி ஆகியோர்கள் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தர்கள் என அ.சா.ஆ.13 முதல் 18 வரையிலான சாதி சான்றிதழ்களை பெற்று வந்ததாகவும், பின்னர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தெய்வநாயகி மற்றும் வட்டாட்சியர் மலர்கொடி ஆகியோர்களிடம் சாதி சான்றிதழ் பெற்றுள்ளார். 1-ம் எதிரி குமரவேல், 2-ம் எதிரி வெங்கடேசன், 3-ம் எதிரி செந்தில், 4-ம் எதிரி ராஜ், 5-ம் எதிரி தமிழரசன், 6-ம் எதிரி விக்னேஷ், 7-ம் எதிரி துரையரசன் ஆகியோர்கள் இந்து கள்ளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என அ.சா.ஆ-19 முதல் அ.சா.ஆ.25 வரையிலான சாதி சான்றிதழ்கள் பெற்று எதிரிகள் மீது கடந்த 31.03.2017-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சியங்கள் முடிந்தவுடன் அரசுத்தரப்பு சாட்சியங்கள் எதிரிக்கு பாதகமாக உள்ள விஷயங்களைப் பொறுத்து பா.நா.சு.ச பிரிவு 351(1)(b) -ன் கீழ் சொல்லப்பட்டுள்ளவாறு எடுத்துக்கூறி வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்களை பொய் சாட்சியங்கள் என்று கூறியுள்ளார். பின்னர், எதிரி தனது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

8. **<u>இவ்வழக்கில் தீர்மாணிக்கப்படவேண்டி பிரச்சனைகள்</u>** :-

அரசுத்தரப்பில் எதிரி மீது இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 326, 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவுகள் 323, 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ?

**9.** இரு தரப்பு வாதங்களும் நன்கு கேட்கப்பட்டது. சாட்சி சான்றாவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**10. தீர்வு:-**

அரசு தரப்பு வழக்கின் படி காயம்பட்ட நபர்களில் ஒருவராக கூறப்பட்டுள்ள அ.சா.3 ன் கணவரான மோகன் என்பவர் இறந்துவிட்டார் என இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்து இவ்வழக்கில் பாதிக்கப்பட்டதாகவும் மற்றும் சம்பவத்தை கண்ணுற்றதாகவும் அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள சாட்சிகளான அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 பாலாஜி ஆகியோர்கள் தங்களது சாட்சியங்களில் இந்த வழக்கின் எதிரி குற்றமிழைத்துள்ளார் என கருதும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை இவ்வாறான நிலையில்

அ.சா.6 ஆன காவல் துணை கண்காணிப்பாளர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறும் சாட்சியத்தின் அடிப்படையில் இந்த எதிரி குற்றம் இழைத்துள்ளார் என முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இந்த 6ம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு 148 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 326, இ.தச. பிரிவு 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), இ.த.ச.பிரிவு 323, இ.த.ச பிரிவு 149 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s), இ.த.ச.பிரிவு 336 இ.த.ச.பிரிவு 506(2) உ/இ, ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரியை மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து எதிரியை பா.நா.சு.ச பிரிவு 258-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 -ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 20:02:33 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா-1 | பார்த்திபன் |
| அ.சா-2 | சுந்தர் |
| அ.சா-3 | கவிதா |
| அ.சா-4 | ராஜராஜன் |
| அ.சா-5 | பாலாஜி |
| அ.சா-6 | குணசேகரன் - குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ-1 | புகாரில் உள்ள அ.சா.3-ன் கணவர் மோகன் என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ-2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ-3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ-4 | செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ-5 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ-6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ-7 | செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ-8 | அ.சா.1 பார்த்திபன் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ-9 | அ.சா.2 சுந்தர் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ-10 | அ.சா.3 கவிதா விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ-11 | அ.சா.4 ராஜராஜன் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ-12 | அ.சா.5 பாலாஜி விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ-13 | மோகன் என்பவரின் சாதி சான்று |
| அ.சா.ஆ-14 | அ.சா.1 பார்த்திபன் சாதி சான்று |
| அ.சா.ஆ-15 | அ.சா.2 சுந்தர் சாதி சான்று |
| அ.சா.ஆ-16 | அ.சா.3 கவிதா சாதி சான்று |
| அ.சா.ஆ-17 | அ.சா.4 ராஜராஜன் சாதி சான்று |
| அ.சா.ஆ-18 | அ.சா.5 பாலாஜி சாதி சான்று |
| அ.சா.ஆ-19 | 1-ம் எதிரி குமரவேல் சாதி சான்று |
| அ.சா.ஆ-20 | 2-ம் எதிரி வெங்கடேசன் சாதி சான்று |

| | |
|---|---|
| அ.சா.ஆ-21 | 3-ம் எதிரி செந்தில் சாதி சான்று |
| அ.சா.ஆ-22 | 4-ம் எதிரி ராஜ் சாதி சான்று |
| அ.சா.ஆ-23 | 5-ம் எதிரி தமிழரசன் சாதி சான்று |
| அ.சா.ஆ-24 | 6-ம் எதிரி விக்னேஷ் சாதி சான்று |
| அ.சா.ஆ-25 | 7 ம் எதிரி துரையரசன் சாதி சான்று |

**அரசுத்தரப்பு சான்றுபொருட்கள்:** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சி , சான்றவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:-** இல்லை

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 20:02:50 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.